OS .No. 144/2022 நாள் : 09.07.2025

<u>DW1 பிரகாஷ்</u>

<u>குறுக்கு விசாரணை (வாதிதரப்பில்)</u>

எனது பெயர் பிரகாஷ், எனக்கு வழக்கின் விவரங்கள் தெரியும். எனது நண்பர் மீன் வியாபாரம் செய்வதற்காக என்னை கடன் வாங்க சொன்னார். நானும், எனது நண்பரும்தான் வங்கிக்கு சென்று கடன் கேட்டோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள புகைப்படம் மற்றும் கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.2ல் உள்ள கையெழுத்தும் என்னுடைதுதான். வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். நான் கடனை சரியாக செலுத்தினேனா என்றால் இல்லை. அதனால் எனக்கு 25.11.2021 தேதியில் எனக்கு வங்கியிலிருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. அதனை நான் பெற்றுக் கொண்டேன். எனது எதிர்வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் தாவா கடன் எனது நண்பர் சபரிநாதன் நடத்தி வரும் மீன் வியாபாரத்திற்காக என்னை கடன் வாங்க சொன்னார் என்று கூறியுள்ள நிலையில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களில் சபரிநாதன் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. கடனுக்கு அவர் ஜாமீன்தாரராக இருந்து கையெழுத்து செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு வங்கியில் கொடுத்தது தொழில் கடன். என்னிடம் காட்டப்படுவது நான் வங்கியில் என்னுடைய கடனை மறு வடிவம் செய்ய விண்ணப்பித்த கடிதம் என்றால் சரிதான். அதில் நான்தான் கையெழுத்து செய்துள்ளேன். அது **வா.சா.ஆ.10** ஆகும். என்னிடம் காட்டப்படும் வங்கி வரைவோலையில் என்னுடைய கையெழுத்து உள்ளது, அது **வா.சா.ஆ.11** ஆகும். வங்கியில் நான்தான் கடன்தாரர் என்றும், வங்கி சட்ட விதிகளின்படி தொழில் கடனுக்கு சாமான்கள் வாங்கும் நிறுவனத்தின் பெயருக்கு வரைவோலை கொடுக்கப்படும் என்றும், அதில் பொருள் வாங்குபவர் என்று கடன் பெறுபவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வாதி தரப்பு ஆவணங்கள் அனைத்திலும் எனது பெயர்தான் கடன்தாரராக உள்ளது என்பதால் நான்தான் தாவா கடன் தொகையை திரும்ப செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலம், எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரங்கள் பொய் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**